# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி:

## சாராம்ச அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

ஜனவரி 2023

# அறிமுகம்

2023 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை தனது 75வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றது. அரசாங்கம் முன்னெடுக்கின்ற கொண்டாட்ட நடவடிக்கைகளுக்கு மத்தியில், குடிமக்கள் அதிகப்படியான வாழ்க்கைச் செலவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற விடயங்களினால் தொடர்ந்தும் துன்பப்படுகின்றார்கள். தனது பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் நோக்கத்தில், மக்களின் வீட்டுப் பொருளாதாரத்தை மேலும் பாதிக்கின்ற வகையில் அரசாங்கம் அதிக கட்டணங்களையும் வரிவிதிப்புகளையும் முன்மொழிகின்றது. இந்தப் பின்னணியில், தற்போது விவாதப் பொருளாக உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள், குடும்பப் பொருளாதார நிலைமை மற்றும் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பொருளாதார நிர்வாகம் மீதான பொதுமக்களின் திருப்தி மற்றும் அதிருப்தி என்பவை குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறியும் நோக்கில் ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி ஆய்வின் நான்காவது அலை நடாத்தப்பட்டது.

இந்தக் கணக்கெடுப்பு ஆய்வானது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் நடாத்தப்பட்டது. சோஷல் இன்டிகேட்டரானது, 1999 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பரந்த அளவிலான சமூக-அரசியல் பிரச்சினைகள் குறித்து பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வுகளை நடாத்தி வருகின்றது. இந்த ஆய்வானது கலாநிதி பிரதீப் பீரிஸ், மா. கிருஷ்ணமூர்த்தி, முதிதா பத்திரன, இஷாரா ஜயரத்ன ஆகியோரை உள்ளடக்கிய குழுவினால் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வை நடாத்த ஆதரவளித்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கு சோஷல் இன்டிகேட்டரானது தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# முறைமையியல்

ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி நான்காவது அலை ஆய்வானது, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நான்கு பிரதான இன சமூகங்களைச் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) சேர்ந்த 1222 பதிலளிப்பவர்களைக் கொண்ட மாதிரியுடன் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகரப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குகின்றது. பல கட்டங்களில் எழுமாற்றைக் கொண்ட அடுக்கு மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி மாதிரியின் இடம் தெரிவு செய்யப்பட்டது. மேலும் பதிலளிப்பவர்கள் எழுமாற்று மாதிரி தெரிவு நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெளிக்கள ஆய்வானது 2023 ஜனவரி 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் உள்ள சோஷல் இன்டிகேட்டரின் வெளிக்கள ஆய்வாரள்களைப் பயன்படுத்தி நடாத்தப்பட்டது. நான்கு முக்கிய இன சமூகங்களைச் சேர்ந்த மொத்தம் 78 வெளிக்கள ஆய்வாளர்கள் (ஆண் மற்றும் பெண்) ஆய்வில் பங்கேற்றனர். சனத்தொகையின் உண்மையான மாவட்ட மற்றும் இன விகிதாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவுத்தொகுப்பானது மதிப்பேற்றப்பட்டது. சமூக அறிவியலுக்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி தரவுத்தொகுப்பு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# முடிவுகளின் சாராம்சம்

## வீட்டுப் பொருளாதாரம் தொடர்பான கருத்து

- ஆய்வில் ஜூலை 2022 காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது இலங்கையர்களின் குடும்பப் பொருளாதார நிலைமை பற்றி ஆராயப்பட்டது. அதிபெரும்பான்மையினர் (79%) பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளதாக கூறுகின்றனர். இந்த மோசமான பொருளாதார அனுபவம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஆகிய இருபகுதிகளிலும் வெளிப்படுகின்றது.

## ஜனாதிபதி விக்கிரமசிங்க பொருளாதாரத்தை நிர்வகிக்கும் விதம் தொடர்பிலான திருப்தி அதிருப்தி

- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் விதம் தொடர்பில் நான்கில் மூன்று அளவிலான மக்கள் (76%) திருப்தி அடையவில்லை என்று கூறும் அதேவேளை, தாங்கள் திருப்தியடைவதாக 16% மக்கள் மட்டும் தெரிவித்துள்ளனர். நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகள் மற்றும் இரு வயதினரிடையேயும் (30 வயதுக்கு கீழ் மற்றும் 30 வயதுக்கு மேல்) இந்த அதிருப்தி பரவியுள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவியுடன் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது தொடர்பான கருத்து

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) இன் உதவியை அரசாங்கம் நாடுவது குறித்து பதிலளிப்பவர்களின் கருத்து பற்றி வினவியபோது - 29% இனர் IMF இன் உதவியுடன் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்றும், 56% இனர் இந்த அணுகுமுறை தொடர்பில் நம்பிக்கையின்மையையும் தெரிவித்தனர். நகர்ப்புற (22%) பகுதிகளுடன் ஒப்பிடும்போது கிராமப்புறங்களில் (31%) வாழும் இலங்கையர்கள் இந்த அணுகுமுறையில் நம்பிக்கையுடன் உள்ளனர். வயது அடிப்படையில், IMF உதவினாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள இலங்கைக்கு முடியாது என்று 30 வயதுக்கு குறைவான இளைஞர், யுவதிகள் (63%) கூறுகின்றனர்.

## விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கீழ் புதிய பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான கருத்து

- விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சில பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய பொதுமக்களின் கருத்தை இந்த ஆய்வு ஆராய்ந்தது. ஏறக்குறைய அனைத்து இலங்கையர்களும் (97%) மின் கட்டண உயர்வுக்கு எதிராக உள்ளனர். பெரும்பான்மையான இலங்கையர்கள் (91%) அரசாங்கம் புதிய வரிகளை விதிப்பது தொடர்பில் மகிழ்ச்சியடையவில்லை என்பதுடன், 6% இனர் இந்தக் கொள்கையை தாங்கள் அங்கீகரிப்பதாகக் கூறுகின்றனர். 39% மக்கள் அரசு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பதை ஆமோதிப்பதாகவும், 54% இனர் இந்தக் கொள்கையை எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

- பிரதேசம் மற்றும் வயது அடிப்படையில், கணிசமான விகிதத்தினர் மின்சாரக் கட்டண அதிகரிப்பையும் புதிய வரிகள் விதிப்பதையும் ஏற்கவில்லை.

குறிப்பிடத்தக்க வகையில், நகர்ப்புற, கிராமப்புற பகுதிகள் மற்றும் இரு வயதுப் பிரிவினரும் சுமார் 40% இனர் அரசு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை குறைப்பதை அனுமதிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் (MPs) தொடர்பான அபிப்பிராயம்

- இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கருத்தில் கொண்டு, பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வாழ்க்கை முறையை கொண்டுசெல்லும் விதம் குறித்து பதிலளிப்பவர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் நெருக்கடிக்கு முன்னர் வாழ்ந்ததைப் போலவே அவர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறையை வாழ்கிறார்கள் என்ற கருத்தை பெரும்பாலான இலங்கையர்கள் பகிர்ந்து கொள்வதாக ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இந்தக் கருத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகள் மற்றும் இரு வயது பிரிவினரிடையேயும் (30 வயதுக்குக் கீழே மற்றும் 30 வயதுக்கு மேல்) காணப்படுகின்றது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான அபிப்பிராயம்

- தற்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது ஒரு விவாதப் பொருளாக உள்ளது. எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது குறித்து மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என 58% இனரும், அது பிற்போடப்பட வேண்டும் என 21% இனரும் கூறுகின்றனர். இந்தக் கருத்து நகர்ப்புற, கிராமப்புற பகுதிகள் மற்றும் இரு வயதுப் பிரிவினரிடையேயும் (30 வயதுக்குக் கீழே மற்றும் 30 வயதுக்கு மேல்) காணப்படுகின்றது.

- உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நினைக்கும் மக்களில், 46% இனர் தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை இல்லை, எனவே தேர்தலை நடத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர். ஜனநாயகத்தை உறுதிப்படுத்த தேர்தல் முக்கியமானது என்று 23% இனர் கூறியுள்ள நிலையில், 21% இனர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்கனவே தாமதமாகிவிட்டதாகவும், அது மிகவும் முன்னதாகவே நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர். தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை (50%) இல்லை என்ற கருத்தைப் பகிர்ந்து கொள்வது பெரும்பாலும் 30 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

- உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட வேண்டும் என்று கூறுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் (71%) பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் அரசாங்கம் தேர்தலுக்கு செலவு செய்யக் கூடாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இது நகர்ப்புற, கிராமப்புற பகுதிகள் மற்றும் இரு வயதுப் பிரிவுகளிலும் (30 வயதுக்குக் குறைவான மற்றும் 30 வயதுக்கு மேல்) பொதுவாகப் காணப்படும் கருத்து ஆகும்.

…

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112081384-6
இணையதளம்: http://www.cpalanka.org

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/1B, 1/1, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112826010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: krishna@cpasocialindicator.org

Making Social Research Count